1991 செப்டம்பர் 18]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்விக்கும் இங்கே கேட்கின்ற கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் கூட, தற்போது விவசாயிகளுக்கு கொடுக்கின்ற மின்சாரத்தினுடைய கட்டணத்தை குறைக்க அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது தான் கேள்வி. நான் ஏற்கனவே சொன்னது போல் நம்முடைய அரசு ஏற்கனவே 545 கோடி ரூபாய் செலவு செய்து 4,040 மில்லியன் யூனிட் அளவுக்கு இன்றைக்கு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே, மற்ற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் கேட்க விரும்பினால் அதற்கென்று தனியாகக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 51, திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை.

51—

* 127.— திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் 1990—ஆம் ஆண்டில் விவசாயிகள் அனுப்பிய கரும்பிற்கான தொகை இன்னும் வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு கரும்பு உற்பத்தி செய்து வழங்கிய விவசாயிகளுக்கு கடந்த ஆண்டிலே 4.12 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய பணத்தை நிறுத்தி வைத்து இருந்தார்கள். ஆனால் வாடியப் பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று சொல்லக்கூடிய வள்ளலாருடைய வழியில் வந்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே அந்த விவசாயிகளுக்கு கிடைக்கவேண்டிய பணத்தை வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். அதன் விளைவாக 13— 7— 1991க்குள் முழுத் தொகையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சென்ற ஆண்டு காலம் கடந்து இந்த விவசாயிகளுடைய பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதைப்போல இந்த 1991 ஆம் ஆண்டு விவசாய உற்பத்தியாளர்களுக்கு பட்டுவாடா செய்யப்பட வேண்டிய பணம் இன்னும் பல பகுதிகளில் பட்டுவாடா செய்யப்படவில்லை. இப்படி காலம் கடந்து பட்டுவாடா செய்வதால் விவசாயிகள் மீண்டும் கரும்பு சாகுபடி செய்வதற்கு முன்வருவார்களா என்ற ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிற காரணத்தால் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு உடனடியாக பணம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த ஆலையிலிருந்து பணம் வரவில்லை என்ற குறிப்பைத் தருவார்கள் என்று சொன்னால் அந்தப் பணம் விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை என்ற கேள்வியைக் கேட்டு இருக்கிறேன். அந்த ஆலையில் மட்டுமல்ல தென் ஆற்காடு மாவட்டத்தில் இயங்கி வருகின்ற கூட்டுறவுத் துறையில் இயங்கி வருகின்ற எம். ஆர். டி. சர்க்கரை ஆலையில் கூட பணம் பட்டுவாடா செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு இருக்கிறது. அதையும் அங்கே இருக்கின்ற விவசாயிகள் பயன் பெறுகின்ற அளவுக்கு விரைவில் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். அதோடு மட்டுமல்ல, அந்த ஆலைக்கு உபயோகப் படுத்துகின்ற மாட்டுவண்டி சத்தம், டிராக்டர் சத்தம் எல்லாம் இன்னும் இன்றுவரை பட்டுவாடா செய்யப்படவில்லை. அதையும் உடனடியாக கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்ட சர்க்கரை ஆலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. தங்கமுத்து.

திரு. கே. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா குருங்குளம் சர்க்கரை ஆலையில், கடந்த 2 ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சியினுடைய தவறான தலையீட்டால் 1,250 டன் அரவைத் திறனை 2,500 டன்னாக கூட்டியிருந்தும் தனியார் மில்களுக்கு, வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட காரணத்தால் இப்படிப்பட்ட தேக்க நிலை வந்தது என்று அரசு அறியுமா? இந்த ஆண்டு இதை....(மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. தங்கமுத்து, ஏற்கனவே விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளைக் கொடுப்பது பற்றிய கேள்வி இது. நீங்கள், அங்கிருந்து வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்ட சூழ்நிலையைச் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். அந்தத் தொகையைக் கொடுப்பதில் இருக்கிற தேக்க நிலை பற்றியதாக உங்களுடைய துணைக் கேள்வி இருக்கலாம்.

திரு. கே. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவைத் தொகை ஏற்பட்டதற்குக் காரணமே வெளி மாவட்டங்களுக்கு, தனியார் மில்களுக்கு அனுப்பியதால்தான். ஏற்கனவே தவறான தலையீட்டால் அந்த அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் தலைமை நிர்வாகக் கோளாறினால் இந்தத் தேக்க நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டாவது அதில் உடனடியாகத் தலையிட்டு அரசு அதை சரி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அரசு செய்த தவறுக்குத்தான் நாங்கள் உடனடியாக அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். இந்த அரசு நிச்சயமாக பரிசீலித்து விவசாயிகள் பயன்பெறக்கூடிய வகையிலே திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஆலையானாலும் அல்லது அரசுத் துறையைச் சேர்ந்த ஆலையானாலும் பொதுவாகவே விவசாயிகளுக்குக் கரும்புப் பணத்தை தருவதை காலதாமதமாகத் தருகிறார்கள். அவர்களுக்கு உடனடியாகப் பணத்தைத் தர வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 52, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வனம் மற்றும் மீன் வளத் துறை அமைச்சர்.

மீனவர்களுக்கு இலவச இன்சூரன்ஸ் திட்டம்.

52—

*1044— திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீன்பிடிக்கும் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மீனவத் தொழிலாளர்களுக்கு அரசு சார்பில் இலவச இன்சூரன்ஸ் திட்டம் செயல்படுத்த உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) 1-1-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது அத்தகைய திட்டங்கள் செயல்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் பல்வேறு பகுதிகளிலே செயல்படுத்தப்படவில்லை. இதை கேரளாவிலே ஒழுங்கான முறையிலே செய்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே, குறிப்பாக இந்தத் திட்டம் 84-லேயிருந்து செயல்முறையிலே இருப்பதாகச் சொன்னாலும்கூட, பல பகுதிகளிலே இத்திட்டம் அமல்படுத்தப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்கிற புகார் அரசுக்கு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஏழைகளின் ஆட்சி. ஏழைகளின் நலனில் அக்கறை கொண்ட அரசு. அவரது தாயுள்ளம் ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும். அறிஞர் அண்ணா கூறியதுபோல ''ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும்'' புரட்சித் தலைவி அவர்களின் புனிதமான ஆட்சியில், முன்பு ஒரு மீனவ